*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
**ISSN: 2456-5148 (Online)**
**www.ngmtamil.in**

**களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.0 Multidisciplinary International
DOI: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026, p285-296** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# தமிழ் எழுத்தின் பெயர் – சில விமர்சனங்கள்

The Nomenclature of the Tamil Script: A Critical Study

**இர.தினகர்.**
கல்வெட்டு ஆய்வாளர், 147, மாரியம்மன் கோவில் தெரு, கே. என். பேட்டை, கடலூர் – 607 401.
**R. Dhinakar,**
*Epigraphical Researcher, 147, Mariamman kovil Street, K .N Pettai, Cuddalore- 607401.*
**முனைவர் சு. இளமாறன்,**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்,
இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெய்யூர், கன்னியாகுமரி-629 802.
**Dr.S.Elamaran*,**
*Assistant Professor, Department of Tamil & Research Centre, Lekshmipuram College of Arts & Science, Neyyoor, Kanniyakumari-629 802. E-Mail maranlpc@gmail.com. ORCiD: https://orcid.org/0000-0002-7559-5980.*

*Article history*
Received: 31-07-2026
Revised: 31-07-2026
Accepted: 01-07-2026
**Published: 08-08-2026**

*Corresponding Author Email: maranlpc@gmail.com

**Abstract:** The origin and development of the Tamil script constitute an important area of research in Tamil linguistics, epigraphy, palaeography, and cultural history. Inscriptions serve as primary sources for tracing the historical evolution of Tamil script, as they provide valuable evidence concerning letter forms, graphic changes, word structures, grammatical usage, personal names, place names, and records of donations. The development of Tamil script was not a sudden phenomenon but the outcome of a gradual linguistic and palaeographic evolution over several centuries. The emergence of Tamil-Brahmi, followed by Vatteluttu, medieval Tamil script, and the transformations associated with the printing era, demonstrates the dynamic nature of Tamil writing traditions. The nomenclature assigned to the early Tamil script also requires critical examination. Terms such as Brahmi, Damili, and Dravidi have been used in different scholarly contexts, while the designation Tamil-Brahmi emerged as a later scholarly classification for the ancient script forms associated with Tamil. Therefore, this study critically examines the origin, development, and nomenclature of the Tamil script by integrating evidence from inscriptions, archaeology, numismatics, manuscripts, literary sources, and palaeography. The study emphasizes the need for an interdisciplinary approach to understand the historical identity and evolutionary trajectory of the Tamil script.

**Keywords:** *Tamil Script, Tamil-Brahmi, Vatteluttu, Epigraphy, Palaeography, Script Evolution, Nomenclature, Tamil Linguistics.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

© 2014 The Author(s). This open access article is distributed under a Creative Commons Attribution (CC-BY) license

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் எழுத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை ஆராய்வதில் கல்வெட்டுகள் முதன்மையான முதன்மை ஆதாரங்களாகும். கல்வெட்டில் காணப்படும் எழுத்து வடிவம், எழுத்துகளின் மாற்றம், சொல் அமைப்பு, இலக்கணப் பயன்பாடு, அரசர்களின் பெயர்கள், ஊர்ப் பெயர்கள், கொடைச் செய்திகள் ஆகியவற்றை ஒப்பிட்டு ஆய்வு செய்வதன் மூலம் குறிப்பிட்ட காலகட்டத்தின் மொழி மற்றும் எழுத்து வளர்ச்சியைத் தெளிவுபடுத்த முடியும். தமிழ் எழுத்தின் வரலாறு என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் திடீரென உருவான வரலாறு அல்ல; பல நூற்றாண்டுகளாக நிகழ்ந்த எழுத்தியல் மற்றும் மொழியியல் பரிணாமத்தின் விளைவு ஆகும். தமிழ்-பிராமி சான்றுகளிலிருந்து தொடங்கி வட்டெழுத்து, இடைக்காலத் தமிழ் எழுத்து, அச்சுக்கால மாற்றங்கள் எனத் தொடர்ந்து இன்றைய நவீனத் தமிழ் எழுத்து உருவாகியுள்ளது. எழுத்தின் பிறப்பை, பிரமனின் கொடையாகவோ அல்லது பிராமணரின் கண்டுபிடிப்பாகவோ காட்டுகிறது, இக்கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகளைப் போலவே இருந்த தொன்மைத் தமிழெழுத்துகளை பற்றி ஆய்வு மேற்கொண்டதில் தமிழ் கல்வெட்டில் உள்ள வரிவடிவத்திற்கு தமிழ் பிராமி என்று பெயரை இட்டனர். வரலாற்றில் தமிழெழுத்துகள் என்றுமே பம்மி என்றோ, பிராமி என்றோ, தாமிலி என்றோ, திராவிடி என்றோ, பெயர்களைச் சுமந்ததில்லை. எனவே, தமிழ் எழுத்தின் தோற்றத்தை ஆராயும்போது இலக்கியச் சான்றுகளோடு கல்வெட்டு, தொல்லியல், நாணயவியல், ஓலைச்சுவடி மற்றும் எழுத்தியல் சான்றுகளை ஒருங்கிணைத்து அணுகுவது ஆய்வுநோக்கில் மிகவும் அவசியமானதாகும்.

**திறவுச்சொற்கள் :** தமிழ் எழுத்து, தமிழ்-பிராமி, வட்டெழுத்து, கல்வெட்டியல், எழுத்தியல், எழுத்து பரிணாமம், பெயரிடல், தமிழ் மொழியியல்

**முன்னுரை**

பண்டையத் தமிழெழுத்துகளைக் குறிக்க நாம் பயன்படுத்தி வரும் தமிழ்-பிராமி, பிராமி, தாமிலி, தமிழி, திராவிடி போன்ற பெயர்கள் இவ்வெழுத்திற்கு பொருந்துமா என்று இலக்கியம் மற்றும் கல்வெட்டு தரவுகளைக் கொண்டு ஒப்புநோக்கப்பட்டுள்ளது. சங்க கால தொன்மைத் தமிழெழுத்து பொறிப்பு உடைய பானையோடுகள், முத்திரைகள், கல்வெட்டுகள், அணிகலன்கள் போன்றவற்றின் எழுத்து முறைகள் சொல்லும் போது அவற்றை தமிழ் பிராமி எழுத்து/கல்வெட்டு என்றே குறிப்பிடுவது வழக்கமாகும். இவ்வாறு தமிழ் பிராமி என்று சொல்லுங்காலமே நம் மனதில் இது பிராமி என்ற வடிவின் தமிழுக்கான வடிவம் என்று தோன்ற செய்யும் தன்மையுடையது. நாம் மேற்கண்ட பிராமி (பம்மி) வரலாற்று வரைவியல் கூறுகளையெல்லாம் ஒரே சொல்லில், சொன்னதும் இவ்வெழுத்து வடக்கேயிருந்து தமிழகம் புகுந்தது என்னும் எண்ண வைக்கும் அளவிற்கு வீரியம் மிக்க ஒரு சொல் தான் இந்த தமிழ்-பிராமி.

தமிழ்-பிராமி என்னும் பெயர் எவ்வாறு இந்த எழுத்திற்கு வழங்கப்பட்டது? இதில் உள்ள பிராமி என்னும் பெயருக்கு பின் உள்ள வரலாறு என்ன? உண்மையில் தமிழர்கள் பண்டைய காலத்தில் தமிழெழுத்துகளை எவ்வாறு வழங்கினர்? தமிழ்-பிராமி என்னும் பெயரை மறுக்கின்றவர்கள்

இவ்வெழுத்து முறையைத் தாமிலி, தமிழி, திராவிடி என்றெல்லாம் சொல்கின்றனரே அவை பொருந்துமா? இக்கட்டுரை தமிழ்-பிராமி என்னும் பெயர்களுக்கும் என்ன தொடர்பு என்பதை ஆராய்கிறது.

**பிராமி பெயரும் வரலாறும்**

துணைகண்டத்தின் வரலாற்றில் இதுவரை கிடைத்தவற்றுள் பழமையானதும் முழுமையாகப் படித்தறியப்பட்டதுமான எழுத்து வரிவடிவம் என்னவென்று இந்திய கல்வெட்டு ஆய்வாளர்களிடம் வினவினால் அவர் சொல்லும் பதில் பிராமி ஆகதான் இருக்கும். இந்திய எழுத்து வரிவடிவங்களுக்கெல்லாம் தாய் வடிவம் என்றாலும் அது பிராமி என்று தான் சொல்வார்கள். இவற்றில் உண்மையுள்ளது. ஆனால் அது பிராமி என்னும் அந்தப் பெயருக்கு பின்னால் உள்ளது. உண்மையில் நம் அறிஞர்கள் இன்று பிராமி என்று குறிப்பிடும் இந்த எழுத்து முறை தான் பழமையானது. ஆனால் அதன் பெயர் பிராமியும் அல்ல. இவ்வெழுத்து முறையைத் தான் பண்டைய காலத்தில் பிராமி என்று அழைத்தனரா என்றால் அது ஐயத்திற்குரியதே என்று கல்வெட்டு அறிஞர் ரிட்சர்ட் சாலமன் பின் வருமாறு **“நாம் இன்று பிராமி என்று குறிப்பிடும் இந்த எழுத்து வடிவத்தை தான் அன்று அசோகன் காலத்தில் அவர்கள் பயன்படுத்திய எழுத்திற்கு வழங்கினார்கள் என்று உறுதியாக, கூற முடியாது மேலும் அன்று அவர்கள் பிராமி என்று குறிப்பிடும் எழுத்து முறை என்னவென்று நமக்கு முழுமையாக தெரியாது” என்று தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்[i].**

பிராமி என்னும் பெயரே இவ்வெழுத்திற்கு பொருந்துமா என்னும் ஐயப்பாடு உள்ள நிலையில் தமிழ் பிராமி என்று வழங்குவது பொருந்துமா என்பது ஆய்விற்குரியதே. பிராமியும் தமிழ்-பிராமியும் எவ்வாறு இவ்வெழுத்துகளின் பெயராகின என்று நோக்குவது வழி நமக்கு விடை புலப்படலாம். அதற்கு கால வரிசை படி நாம் இந்திய கல்வெட்டியல் மற்றும் தமிழ் கல்வெட்டியல் ஆய்வு வரலாற்றை அணுகுவது இன்றியமையாதது.

இத்துணைக்கண்டத்தில் **18-**ஆம் நூற்றாண்டு இறுதியில் தொடங்கி **19-**ஆம் நூற்றாண்டில் கல்வெட்டாய்வுகள் பெருகின**.** ஆனால் **1800-**களின் பிற்பகுதியில் வடக்கத்திய கல்வெட்டுகள் பற்றிய ஆய்வுகளே மேலோங்கியது**,** அன்று படித்தறியப்படாத அசோகனின் கல்வெட்டெழுத்துகளை படித்தறியவே அன்றைய ஆய்வுலகம் வேகம் காட்டியது**.**

| **எண்** | **ஆண்டு** | **ஆய்வு** |
|---|---|---|
| 1. | 1785 | தேவ பால வேவரின் முங்கீர் வடமொழி செப்பேட்டை சர் சார்லஸ் விக்கின்ஸ் படித்தறிந்தார். |
| 2. | 1788 | பூதல் தூண் கல்வெட்டை வெளிட்டார் |
| 3. | 1801 | தோப்ரா கல்வெட்டில் உள்ள விக்ரகபாலரின் கல்வெட்டை கோல் புரூக் (Cole Brooke) படித்தறிந்தார் |
| 4. | 1834 | டி.எஸ். பர்ட் (T.S. Brut) அசோகன் மற்றும் சமுத்திரகுப்த்தனின் அலகாபாத் தூண் கல்வெட்டின் படியை வெளியிட்டார். |

| | | |
|---|---|---|
| 5. | 1836 | கிஸ்டியன் லாசன் ஜேம்ஸ் பிரின்சபிற்கு எழுதிய கடித்ததில் கிரேக்க மற்றும் பாகத இருமொழி நாணயத்திலிருந்த பாகத மொழியிலான அகதுக்ல ராஜா என்ற சொல்லை சரியாக படித்தறிந்தார். |
| 6. | 1837 | ஜேம்ஸ் பிரின்சப் சாஞ்சி கல்வெட்டினை படித்து வெளியிட்டார் |
| 7. | 1838 | கரோஷ்டி வரிவடிவத்தினை படித்தறிந்தனர் |
| 8. | 1886 | டெரியன் டி லாக்கோபெரி (Terrien De Lacouperie) பிராமி என்றும் கரோஷ்டி என்றும் இவ்விருவடிவங்களுக்கும் பெயரிட்டார்.[ii] |

**தொன்மை எழுத்துகள்** சார்ந்த **கல்வெட்டியல் கூறுகளை மட்டும் கீழே விளக்கமாக கொடுக்கப்பட்டுள்ளது**,

1. **1837**யில் ஜேம்ஸ் பிரின்செப் **(James Princep)** பாகத **(**பிராகிருத**)** மொழியிலான அசோகனின் கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகளை கிறிச்டியன் லாசென் **(Christian Lassen)** உதவியோடு படித்தறிந்தார்**.**
2. **1886** ஆம் ஆண்டு டெரியன் டி லாக்கோபெரி **(Terrien De Lacouperie)** சீன பௌத்த சமய நூலையும் பிராகிருத**,** பாலி மற்றும் சங்கத மொழியிலான சமண பௌத்த நூட்களையும் ஒப்பிட்டு பிராமி மற்றும் கரோஷ்டி என்று பெயரிட்டு வழங்கினார்**.**
3. **1895** கல்வெட்டியல் அறிஞர் பியூலர் லாக்கோபெரியின் கூற்றை தன் நூலில் பிரமனின் எழுத்து என்று கூறி வலு சேர்க்கிறார்**.**

**பம்மி பிராமி ஆன கதை**

**காலத்தால் முற்பட்ட பாகத சமண நூற்களான சமயவங்க சுத்தம் கி.பி** (300) **மற்றும் பண்ணவாந சுத்தம்** (கி.பி. 168) **ஆகிய நூற்கள் நமக்கு** 18 **எழுத்துகளின் பெயர்களை தருகிறது**. **அவற்றில் முதலாவது பம்மி**, **நான்காவது கரோட்டி மற்றும் பதினெழாவது தாமிலி**. **ஆம் இதில் பிராமி என்று இல்லை பாகதத்தில் பம்மி என்றே உள்ளது**[iii].

அதிலும் அந்த 18 பெயர்களுமே பம்மி வகை எழுத்தை எழுதுவதற்கான எழுத்து[1] என்றும் அதில் முதலாவதும் பம்மி என்றே வருகிறதை நோக்கும் போது இதில் எங்கேயும் இந்த எழுத்தின் பண்பைச் சொல்லி இதற்கு இன்ன பெயர் என்று வரவில்லை.

டெரியன் டி லாக்கோபெரி பிராமி என்ற சொல்லாட்சியை லலித்தவிஸ்தரம் என்னும் கி**.**பி**.** தொடக்க நூற்றாண்டை சார்ந்த மொழியெர்க்கப்பட்ட சங்கத பௌத்த நூலிருந்தும் அதற்கு முந்தைய அந்நூலின் சீன மூலநூட்கள் சிலவற்றோடு ஒப்பிட்டுமே எடுத்துள்ளார்**.**

இந்நூலானது சங்கதத்தில் மொழிபெயர்க்கபடுவதற்கு முன்னரே சீன மொழிகளில் கி**.**பி**. 2**ம் நூற்றாண்டிலேயே மொழிபெயர்க்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது**.** இந்நூல் **64** எழுத்துகளின் பெயர்களின் வரிசை கொடுக்கப்பட்டுள்ளது அதில் முதலாவது பிராமி **(**இடமிருந்து வலம்**),**

[1] **"bambhie nam livle attharasavihalikkhavihdne pannatte"**

இரண்டாவது கரோஷ்டி (வலமிருந்து இடம்), பனிரெண்டாவது திராவிட லிபி ஆகும். இதற்கு சீன மூலங்களுக்கும் உரித்தான தொடர்பை ஜாவ் சுங்-ஐ ஆய்ந்து அவற்றை பட்டிலிடுகிறார்.

## பம்மி பற்றிய சமண பௌத்த மற்றும் சீன குறிப்புகள்

| | |
|---|---|
| கிமு 300 | சமவாயங்க சுத்தம் (Samavayanga Suttra) |
| கிமு 168 | பண்ணவாநசுத்த (Pannavana Suttra) |
| கி.பி. 221 -263 | Shen- Ching's Pei-shan-lu States (Tang Dynasty) Pu-yao-Ching existed in Shu (Shu-chi) |
| கி.பி. 308 | லலிதவிஸ்தாரம் (Lalitavistara translated By Dharmaraksa Pu-yau-ching) |
| கி.பி. 500 | நாரத ஸ்மிர்தி (Narada Smrti) |
| கி.பி. 587-591 | Jnanagupta's Mahavastu Avadana (source of 64 scripts name) |
| கி.பி. 600 | Lalitavistara (Sanskrit)) |
| கி.பி. 615 | Another Lalitavistara by Dipankara (Fang-Kuang-ta-chuang-yen-ching) |
| கி.பி. 668 | Fa-Yuan-Chu-Lin |

*Tang Dynasty: A.D. 602-664

**பிராமி மற்றும் கரோஷ்டி பற்றிய சீன மூலங்கள் பற்றி ஆய்ந்த ஜாவ் சுங்-ஐ இந்தப் பெயர்கள் எப்படி எடுக்கப்பட்டது என்பன பற்றிய குறிப்புகளைத் தருகிறார். அவை பின்வருமாறு**[iv],

1. இந்திய துணைகண்டத்தின் எழுத்துகளைப் பற்றிய சீனக்குறிப்புகளை பற்றிய ஆய்வில் யுவாங்-சுவாங்கின் குறிப்புகளுக்கு அடுத்தவாறு மேற்கத்திய ஆய்வாளர்களால் அதிகம் மேற்கோள் காட்டப்பட்ட நூல் என்றால் அது பா-யுவான்-சூ-லின் **(Fa-Yuan-Chu-Lin)** தான், இந்நூலில் தான் பிராமி மற்றும் கரோஷ்டி பற்றிய தொன்மை சான்றுகள் கிடைப்பதாக அவ்வாய்வாளர்கள் கருதினர். ஆனால் அந்நூலானது கி.பி. **668-**இல் தான் அதற்கு முந்தைய நூல்களின் சாராம்சங்கள் பலவற்றை கொண்டு முழுமையாக முடிக்கப்பட்டது.
2. கி.பி. ஐந்தாம் நூற்றண்டு நூலான நாரத ஸ்மிருதியானது "படைப்பு கடவுளாகிய பிரமன் தன் சிறந்த கண்களை கொண்டு எழுத்துகளை படைத்திருக்காவிட்டால் இவ்வுலகம் என்றுமே மகிழ்ச்சியை அடைந்து இருக்காது" [2] என்று கூறி பிரமனின் தலையில் எழுத்தின் புராணத்தோற்றத்தை வைக்கிறது. சீன மரபும் நான்கு கண்களையுடைய சாங் சியே **(Ts'ang Chieh)** என்பார் எழுத்தை உருவாக்கினார் என்று குறிக்கிறது.
3. லலிதவிஸ்தரத்திற்கு முன்னரே அதன் மூல நூல் கிபி **221** ஆண்டிலிருந்தே சீன மொழியில் பயன்பாட்டில் இருந்தமை தெரிகிறது.பா-யுவான்-சூ-லின் **(Fa-Yuan-Chu-Lin)** குறிப்பிடும் எழுத்து வரிசையானது அப்படியே ஜனனகுப்தாவின் **(Jñanagupta)** மஹாவஸ்து அவதானா

[2] **"Had not Brahma, the Creator, created writing with the best of eyes, this word could never have attained its happiness"**

**(Mahavastu Avadana)** மொழிபெயர்ப்பிலிருந்து எடுக்கப்பட்டதாம். பிராமி மற்றும் கரோஷ்டி பற்றிய சீன பௌத்த மூலங்கள் கீழ் கண்டவாறு தெரிவிக்கிறது, பு-பான்-ஹ்சிங்-சி-சிங் **(Fu-pan-hsing-chi-ching)** வில் வரும் பெயர்களும் பா-யுவான்-சூ-லின் **(Fa-Yuan-Chu-Lin)** வரும் பெயர்களும் ஒன்றாகவே உள்ளது.

| **பிராமி** | **கரோஷ்டி** | **மூலங்கள்** |
|---|---|---|
| Fan-shu (script) | Ku-liu-shu | P'u-yao-ching (script) |
| The Scripts given by God Brahma | Ku-lu-se-tu- shu | Fu-pan-hsing-chi-ching |
| Fan-mei-shu (Brahmi) | Ku-lu-se-tu- shu | Fang-kuang-ta- chuang-yen-ching |

4. ஜனனகுப்தர் **(Jñanagupta)** இங்கு பிராமி என்னும் தலைப்பின் கீழ் இது ஒரு பிராமணரின் நூல் இந்நூலிருந்து தான் **14** வகை ஒலிகள் வந்தது என்றும் மேலும் கரோஷ்டி என்றால் கழுதையின் வாய் போன்றது என்றும் குறிப்பு கொடுக்கிறார்.
5. யுவாங்-சாங் மொழிபெயர்த்துள்ள அபிதர்ம-விபாச-தஸ்த்ராவில் - பிராமி லிபி பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். கண்டுபிடித்தவர் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? அதற்கு (பிராமணர்) சி-சியென் (Ch'i-chien), "பழங்காலத்தில் சி-பிஇன்-டிஓ (Ch'ti-p'in-t'o) என்ற பிராமணர் இந்த எழுத்தைக் கண்டுபிடித்தார் என்று நான் கேள்விப்பட்டேன்" எனப் பதில் அளித்தார். அப்படியானால், கரோஸ்தியைக் கண்டுபிடித்தவர் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? என்ற கேள்விக்கு அப்பிராமணர் "ஒரு காலத்தில் கரோஸ்தி என்ற பெரிய முனிவர் இருந்தார், அவர்தான் கண்டுபிடித்தவர் என்று எனக்குத் தெரியும்". என பதில் அளித்தாராம் (தை-ஷோ 27 பக். 523).
6. இதற்கு முன், நாகார்ஜுனனின் சீடரான தேவ புத்திசத்வாவின் சத-சாஸ்திரம் தொகுதி 1யில் சாங் வம்சத்தின் சி-சாங் (548-623) பாஷ்யத்தில் விபாசாவை மேற்கோள் காட்டினார். ஆதில் "பிராமண சூ-வி-டோ (Ch'u vi-t'o) பான்-ஷுவைக் (Fan-shu) கண்டுபிடித்தார், கு-லு (Ku-lu) என்ற முனிவர் கு-லு (Ku-lu) என்ற எழுத்தைக் கண்டுபிடித்தார், மகா-பிராஹ்மின் வேதங்களைக் கண்டுபிடித்தார் என்றும் கூறுகிறார். (தை-ஷோ 42 பக். 251),

இதனை கூர்ந்து நோக்கையில் நமக்கு ஒரு செய்தி புலப்படும். இங்குள்ள எல்லா குறிப்புகளும் ஒன்று எழுத்தின் பிறப்பை, பிரமனின் கொடையாகவோ அல்லது பிராமணரின் கண்டுபிடிப்பாகவோ

காட்டுகிறது, மற்றொன்று பிராமி என்பதை வேதம் போன்ற நூலோடு ஒப்பிடுகிறது. இதை பார்க்கும் போது பிராமி என்பது ஒரு நூலாக இருந்து இருக்கலாம் அதில் உள்ள எழுத்து வரிவடித்தினை அந்நூலின் பெயர் கொண்டு அழைத்திருக்க வேண்டும். பிராமி என்றால் மருத்துவ மூலிகை என்றே பதஞ்சலி கூறுவதை நடன. காசிநாதன் மேற்கோள் காட்டுவது[v] இக்கூற்றோடு பொருந்தி போகச் செய்கிறது.

கிரந்தம் என்றால் சங்கத்தில் நூல் என்றே பொருள்படும் நூல் எழுதுவதற்கு பயன்பட்ட எழுத்து வடிவம் என்பதால் அவ்வடிவத்திற்கு கிரந்தம் என்றே பெயர் வழங்கப்பட்டதை ஒப்புநோக்க வேண்டும். பிராமி என்பது எழுத்து வடிவத்தைக் குறிப்பதாக எங்குமே வரவில்லை என நடன. காசி நாதன் தன் தொன்மைத் தமிழ்க் கல்வெட்டுக்கள் – ஒரு புலனாய்வு நூலில் பட்டியலிட்டுள்ளார் அவை பின்வருமாறு,

1. கி.மு. 3 ஆம் நூற்றாண்டில், அதாவது அசோகன் காலத்தில் வாழ்ந்த 'காத்யாயனர்' யவனர்களது எழுத்தான 'யவனானி' எழுத்தைக் குறிப்பிடுகையில், பம்மி - பிராமி எழுத்தைக் குறிப்பிடவில்லையே.
2. கி.மு. 2ஆம் நூற்றாண்டைய, அதாவது அசோகனுக்கு ஒரு நூற்றாண்டு பிற்பட்ட பதஞ்சலியின் மஹாபாஷ்யமும் 'பம்மி' பற்றி யாதொன்றும் தெரிவிக்கவில்லையே. **பதஞ்சலி முனிவர்** '**பிராமி**'**யை** ஒரு '**மருந்து மூலிகை**' என்றுதானே எழுதியிருக்கிறார்.
3. பிருஹத்கதா மற்றும் புராணங்களும் 'பிராமி' எழுத்து பற்றிப் பேசவில்லையே.
4. அமரகோஸம், தாய்மார் எழுவர் தெய்வங்களில் ஒன்றாகத் தானே 'பிராமி'யைக் காட்டியிருக்கிறது.
5. இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களும் புராணங்களும் 'பிராமி' என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றன. ஆனால் 'எழுத்து' என்ற பொருளில் அல்ல.
6. நாரதஸ்மிருதி பிரமன் எழுத்து ஒன்றைக் கண்டுபிடித்ததாகச் சுட்டுகிறது. ஆனால் அந்த எழுத்தின் பெயரைப் புலப்படுத்தவில்லை. இந்நூல் பிற்காலத்திய நூலாகும்.
7. 'பிராமி' என்னும் சொல் 'வாக்கு, பேச்சு' என்ற பொருளில் தான் நூல்களில் பேசப்பட்டிருக்கிறது.
8. உண்மையில் இந்தியத் தத்துவஞானிகள் பேச்சு என்ற பொருளில்தான் பிராமியைத் தெய்வமாகக் கருதினார்களே **அன்றி**, எழுத்தை அவர்கள் தெய்வமாகக் கருதவில்லை என்று தெள்ளத் தெளிவாக சம்ஸ்கிருதப் பேரறிஞர் முனைவர் சங்கர நாராயணன் கூறியிருக்கிறார்.

இவையெல்லாம் தெளிவாக இந்தப் பண்டைய எழுத்திற்கு பிராமி என்ற பெயர் இருந்திருக்க வாய்ப்பில்லை என்றே உணர்த்துகிறது.

**தமிழ்-பிராமி பெயர் வந்த கதை**

இந்த **1837**யிற்கும் **1886**யிற்குமான ஆண்டு இடைவெளி சற்றேறக்குறைய **50** ஆண்டுகள். இதில் நாம் நோக்க வேண்டிய **1837** லாசனும், பிரின்சப்பும் இவ்வெழுத்து முறையைப் படித்தறிந்த போது அதற்கு தம்ம லிபி, மௌரிய லிபி, லாத் லிபி என்று தான் வழங்கப்பட்டதே அன்றி அது பிராமி என்று இல்லை. ஐம்பது ஆண்டுகள் பின்னரே இவ்வெழுத்துளுக்கு பிராமி என்று பெயரிட்டனர். ஆனால் அதற்கு மூன்று ஆண்டு முன்னர் **(1837**யிலிருந்து **45** ஆண்டுகள்**) 1882** ஆம் ஆண்டு தான் முதல் தமிழ் கல்வெட்டான மீனாட்சிபுரம் **(**மாங்குளம்**)** கல்வெட்டு இராபர்ட் சீவலால் கண்டுபிடிக்கப்பட்டது, ஆகினும் நெடுங்காலமாக அக்கல்வெட்டு படித்தறிய படவில்லை.

**தொடர்ச்சியாக எடக்கல்** (1894), **கீழவளவு** (1903), **மேட்டுப்பட்டி** (1906), **மறுகால்தலை** (1906), **யானை மலை** (1906) **என அடுத்தடுத்து தொல் தமிழ் கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டது**, **ஆயினும் முதற்கல்வெட்டு கண்டெடுக்கப்பட்ட பின் ஏறக்குறைய** 37 **ஆண்டுகள் கழித்து 1919 ஆம் ஆண்டில் தான் அக்கல்வெட்டு எழுத்துகளைப் படித்துணரும் ஆய்வுகள் வெளிவரத் தொடங்கின**[vi].

ஆனால் அவையாவும் தமிழல்லாமல் பிராகிருதத்தை மையமாகக் கொண்ட ஆய்வுகளாகவே இருந்தது. 1906 ஆம் ஆண்டில் பழந்தமிழ் கல்வெடுகளைப் படிக்க முற்பட்ட வெங்கையா என்னும் அறிஞர் இக்கல்வெட்டுகள் யாவும் பாலி மொழியிலானவை என்ற நோக்கில் ஆய்ந்தார். பின்னர் ஆய்ந்தோரும் பெரும்பாலும் இக்கருத்துடையோரே. நாராயணராவ் என்னும் ஆய்வாளர் இக்கல்வெட்டுகள் எல்லாம் **'பைகாசி பிராகிருத'** மொழியிலானவை என்று கூறினார்.

**1919**ஆம் ஆண்டு ஹச். கிருஷ்ணா சாஸ்திரி என்பவர் தான் முதன்முதலில் கீழ் திசை மாநாட்டில் **11** இடங்களில் இருந்த **32** தமிழ் கல்வெட்டுகளைப் படித்தறிந்தார். இவரே இக்கல்வெட்டுகளில் திராவிட கூறுகளும் **(**தமிழ் கூறுகள்**)** பிராகிருத **(**பாகத**)** கூறுகளின் கலப்பும் உள்ளது என கூறினார் ஆனால் ழகரம் னகரம் போன்றவற்றை இனங்காணவில்லை[vii]. **1921**ஆம் ஆண்டில் கல்வெட்டுகளில் தமிழ் மொழியே பிராகிருத தாக்கத்தோடு பொறிக்கப்பட்டுள்ளதாக, அக்கல்வெட்டுகளில் தமிழும் இருப்பதாக முடிவிற்கு வந்தனர். 1924 ஆம் ஆண்டு கே. வி. சுப்பிரமணிய ஐயர் தான் இக்கல்வெடுகளில் உள்ள மொழி இந்தோ ஆரிய மொழிகளை சார்ந்தவை அல்ல என்றும் அவை 'ழ' 'ற' மற்றும் 'ன' என்று தமிழுக்குரிய சொற்கள் உள்ளது என்று கண்டறிந்தார் ஆயினும் பிராகிருத சொற்களோடு கலந்தாளப்பட்டுள்ளதாக மூன்றாம் கீழ் திசை மாநாட்டில் 12 இடங்களிலிருந்த 31 கல்வெட்டுகளினை படித்ததன் வழி கூறினார்[viii].

முதல் தமிழ் கல்வெட்டு படித்தறியும் முன்னரே வடக்கே அசோகனின் கல்வெட்டு எழுத்து வரிவடிவத்திற்கு **1886** ஆம் ஆண்டே டெரியன் டி லாக்கோபெரி **(Terrien De Lacouperie)** பிராமி என்று பெயரிட்டு அழைத்தார், அதனை ஏற்று எழுத்தியல் வரலாற்றை எழுத தொடங்கியிருந்தனர் ஐரோப்பியக் கீழை உலக ஆய்வாளர்களும் வடக்கத்திய மற்றும் தமிழகத்தில் இருந்த இந்திய ஆய்வாளர்களுக்கும்.பின்னர் இக்கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகளைப் போலவே இருந்த தொன்மைத் தமிழெழுத்துகளை பற்றி ஆய்வு மேற்கொண்டதில் தமிழ் கல்வெட்டில் உள்ள

வரிவடிவத்திற்கு தமிழ் பிராமி என்று பெயரை இட்டனர். அன்றைய நிலையில் தேவநாம்பிய பியதசி அசோகனின் கல்வெட்டுகளே பழமையானதாகக் கருதப்பட்டது. இக்கல்வெட்டுகளின் வழியே தான் தமிழர்கள் தங்களுக்கான எழுத்தை வடிவமைத்தனர் என்று கருதிய காலத்தில் வைக்கப்பட்ட பெயர் தான் இந்த தமிழ் பிராமி.

**தமிழ் என்பதன் பாகத வடிவம் தாமில் -> தாமிலி அதனை மீண்டும் தமிழ்ப்படுத்திய சொல் தான் தமிழி ஆகும், அதே போன்றது தான் திராவிடியும் இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு தான் பண்டைய காலத்தில் இருந்த தமிழெழுத்துகள் நடன. காசிநாதன் தொன்மைத் தமிழ் என்றே அழைக்கிறார் ஆம் அவை தமிழெழுத்துகள் தான் காலத்தை வேறுபாடு காட்ட தொன்மைத் தமிழ் என்று வழங்குவதே பொருத்தமானது**[ix]. அதே போன்று வடக்கே உள்ள பாகத கல்வெட்டுகளில் உள்ள எழுத்துகளும் தமிழிலிருந்து திரிந்தவை தானே எனவே அவற்றை அவர் பாகத தமிழ் (பிராகிருத தமிழ்) என்றே அழைக்கிறார் இக்கருத்து ஏற்புடையதாகவே தெரிகிறது[x] காரணம் பாகத மொழியும் கூட இந்தோ ஐரோப்பிய மொழி குடும்பத்தை சார்ந்த ஒன்று அல்ல என்றும் அவை தமிழிய மொழி குடும்பத்தைச் சார்ந்தது என்று அறிஞர் சிலர் கூறுவதையும் பாகதத்தை, கொடுந் தமிழோடு தமிழறிஞர்கள் ஒப்பிடுவதையும் நாம் நோக்க வேண்டும்.

**தமிழெழுத்திற்கு என்ன பெயர்?**

இதுவரை கிடைத்தவற்றுள் தொன்மையான இலக்கணமும் சங்க இலக்கியங்களை விட தொன்மையானதுமான தொல்காப்பியத்தின் முதல் அதிகாரமே எழுத்ததிகாரம் தான் அதன் முதல் நூற்பாவே “**எழுத்தென படுப**” என்று தான் தொடங்குகிறது. தமிழ் மொழிக்கான எழுத்தாகவே தமிழர் தாயகத்தில் இவ்வெழுத்துகள் உருப்பெற்றதால் இவற்றிக்கு தனியாக பெயரும் புராண புனைவுகளும் உருவாக்கப்பட வேண்டிய தேவையும் தமிழர்களுக்கு இல்லாமல் போனது எனலாம்.

ஆகினும் சங்க இலக்கிய காலங்களில் இவ்வெழுத்துகளின் தன்மை மற்றும் பண்பினால் அதற்கு அதன் பண்பைச் சுட்டி பெயரிட்டுள்ளனர், எழுதும் பொருட்களினாலும், எழுதப்பெறும் இடங்களின் தன்மைகளினாலும் எழுத்து வரிவடிவம் மாறுபடுவது இயற்கை, கல்வெட்டுகளில் உளியினால் செதுக்கும் போது வளைவான வடிவங்களை எழுதுவது கடினம் ஆகையால் நேர் கோடுகளையும் பக்க கோடுகளையுமே பயன்படுத்தியிருப்பர் அதனை தான் **கோடு எழுத்துகள்** என்று அக்காலத்தில் வழங்கினர் போலும் அதனை கீழ் வரும் அகநானூறின் வரிகளினால் அறிய கிடைக்கிறது.

உப்பு விற்கும் உமணரின் வண்டியின் சக்கரக் காலால் கூரிய உளி கொண்டு குயின்ற கோடு மாய்ந்த (கோடுகளாக இருந்த எழுத்து மாய்ந்து -அழிந்த நிலையில்) எழுத்தைப் படிக்க முடியாமல் அவ்வழியே புதிய மாந்தர்கள் மாற்றி பொருள் கொள்கின்றனர் என்ற பொருளில் வருகிறது அவ்வகப்பாடல்,

> “**மரம்கோள் உமண்மகன் பெயரும் பருதிப்**
> **புந்தலை சிதைத்த வன்தலை நடுகல்**
> **கண்ணி வாடிய மண்ணா மருங்குல்,**

**கூர்ஊளி குயின்ற கோடுமாய் எழுத்துஅவ்**
**ஆறுசெல் வம்பலர் வேறுபயம் படுக்கும்" (அகம்.343)**

அதே போல கூறிய ஊளியினால் குயின்ற எழுத்து என்று பொருளில் **குயில் எழுத்து** என்றும் வழங்கப்பெற்றுள்ளதை கீழ் வரும் அகநானூறு பாடல் வரியறிய இயலும், பாலை நிலத்தில் உள்ள கரடுமுரடான உடலமைப்பு கொண்ட கடுங்கண் மறவர்கள், உளியினால் குயின்ற எழுத்துகளை கொண்டு நடப்பட்டிருந்த நடுகற்களில் தங்கள் அம்பினைத் தீட்டுவதால் அதில் உள்ள எழுத்துகள் சிதைந்து அவ்வழியே புதியதாய் செல்லும் வழிப்போக்கர்களால் படித்தறிய முடியாத நிலையில் உள்ளது என்னும் பொருளில்,

**"இருங்கவின் இல்லாப் பெரும்புன் நாடிக்**
**கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென**
**மருங்குல் நுணுகிய பேஎமுதிர் நடுகல்**
**பெயர்பயம் படரத் தோன்று குயில் எழுத்து**
**இயைபுடன் நோக்கல் செல்லாது அசைவுடன்**
**ஆறுசெல் வம்பலர் விட்டனர் கழியும்" (அகம்.297)**

இவ்விரெண்டு பாக்களையும் மதுரை மருதனிளநாகனார் என்ற புலவரால் இயற்றப்பெற்றவையாகும். இதே போல இதற்கடுத்த காலகட்டத்தில் சிலப்பதிகராமும் கண்ணெழுத்து என்னும் பெயரைச் சுட்டுகிறது. அதனை அடுத்து, பாகத கலப்போடு பொருத்தி விளக்கப்பட்டுள்ளது. இதன் வழி நமக்கு தமிழிலக்கியங்கள் எந்த வித புராண புனைவு பெயர்களையும் வழங்காமல் இயல்பாக மக்கள் பயன் பாட்டில் இருந்த பண்பைச் சுட்டும் பெயர்களையே வழங்குவதை நோக்கும் போது வரலாற்றில் தமிழெழுத்துகள் என்றுமே பம்மி என்றோ, பிராமி என்றோ, தாமிலி என்றோ, திராவிடி என்றோ, பெயர்களைச் சுமந்ததில்லை என்பது தெளிவாகும். மேலும் வடநாட்டில் உள்ளது போன்று கடவுளின் படைப்பு என்றோ தனி ஒருவரின் கண்டுபிடிப்பு என்றோ தமிழிலக்கியங்கள் கூறவில்லை மாறாக அவை தெளிவான இயல்பான எழுத்து கூறுகளையே காட்டுகிறது. எழுத்தின் பிறப்பை இறைவனிடம் கொடுத்த வட மரபு எழுத்தை பற்றி சொல்லும் போது நூலில் இருக்கும் எழுத்தானது மற்றோருவர் கையில் இருக்கும் பணம் போன்றது[3] என்று கூறுவது முரணாக உள்ளது. ஆனால் தமிழோ எண்ணையும் எழுத்தையும் கண் போன்றது என்றும்

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு(திருக்குறள்-392)**

**எண் எழுத்து இகழேல்-(ஆத்திசூடி.7)**

என்று உச்சி மீது வைத்து போற்றுகிறது. இவற்றை எல்லாம் நோக்கும் போது தமிழர்கள் பன்நெடுங்காலமாக எழுத்தின் மீது கொண்டிருந்த புரிதலையும் அழ்ந்த அறிவையுமே உணர்த்துகிறது.

[3] **pustakastha tu yd vidya parahastagatam dhanam, "Knowledge in a book [is like] money in someone else's hand."**

**இலக்கியம் காட்டும் கல்வெட்டு**

எழுத்தின் குறிப்புகள் விரவி கிடப்பதாக பாகத சங்கத இலக்கியங்களில் இவர்கள் காட்ட கூடிய நிலை அவற்றில் எங்குமே கல்லில் எழுத்தை வெட்டிவித்தது பற்றியோ அல்லது எழுத்து பொறிப்பு பற்றியோ அல்லது கல் நட்டு வழிப்பட்டது பற்றியோ எந்த ஒரு குறிப்பும் கிடைக்காமல் இருப்பது வியப்பே ஆனால் தமிழ் மரபில் தொன்மையான தொல்காப்பியம் முதலே நடுகல் மரபு பற்றிய குறிப்புகள் கிடைக்கிறது.

**" காட்சி கால் கோள் நீர்படை நடுகல்**
**சீர்த்தகு சிறப்பிற் பெரும் படை வாழ்த்தலென்று**
**இரு மூன்று வகையிற் கல்லொடு புணர"(தொல்.பொருள். 63)**

நடுகல் என்ற சொல் சங்க இலக்கியங்களில் 13 இடங்களில் வருகிறது அதில் இரண்டு இடங்களில் அந்நடுகல் எழுத்துடன் இருந்த குறிப்பையும் தருகிறது.

**"விழுத்தொடை மறவர் வில்இட வீழ்ந்தோர்**
**எழுத்துடை நடுகல் இன் நிழல் வதியும்"-(அகம்.53 )**
**விழத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்**
**எழுத்துடை நடுகல் அன்ன விழுப்பிணர்ப் (ஐங்குறுநூறு .352)**

என்றெல்லாம் எழுத்து தமிழர்களின் இயல்பான வாழ்வியலின் அங்கமாக இருந்தமையைச் சங்க இலக்கியங்கள் நமக்கு படம் பிடித்து காட்டுகிறது. பிற்கால ஔவையார் மூதுரையில் **"கல்மேல் எழுத்துப்போற் காணுமே"** என்று கல்மேல் உள்ள எழுத்தானது நெடுநாட்கள் அழியாமல் இருக்கும் தன்மை உடையது என்ற பொருளில் பாடியுள்ளார். அதே போல் ஏதேனும் தீர செயல் புரிந்து இறந்தோர்க்கு அவர்களின் பெயரும் புகழும் எழுதி ஊரில் கல் நடும் வழக்கம் இடைக்காலம் வரையிலும் தொடர்ந்ததை இலக்கியங்கள் காட்டுகிறது.

**பட்டோர் பெயரும் அற்றலுமெழுதி**
**நட்ட கல்லும் மூதூர் நத்தமும் -திருவாரூர் மும்மணிக் கோவை**[xi]

இவையெல்லாம் நெடுங்காலமாக கல்லிலும் பிறவற்றிலும் எழுதும் வழக்கம் இம்மண்ணில் நிலைத்திருப்பதன் காரணமாகவே இலக்கியங்களின் வழி வெளிப்படுகிறது என்று உணரமுடிகிறது. ஆதலால் தொன்மையானத் தமிழிலக்கியங்கள் நமக்கு எழுத்து பற்றி எடுத்தியம்பும் சான்றுகளைத் தமிழ் இலக்கியங்கள், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் நெறிகளோடு பொருத்தி பார்க்கும் போது தமிழெழுத்தியல் வரலாற்றில் புதிய புரிதல்கள் உருவாகும்.

**நிறைவுரை**

தமிழ் எழுத்தின் தோற்றம் மிகவும் தொன்மையானது. தமிழ்மொழியை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட தொடக்ககால எழுத்து வடிவமாக தமிழ்-பிராமி (Tamil-Brahmi) கருதப்படுகிறது. கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் தமிழ்-பிராமி கல்வெட்டுகள் காணப்படுகின்றன. குறிப்பாக தமிழ்நாட்டின் மாங்குளம், புகளூர், ஜம்பை, கொடுமணல் போன்ற இடங்களில் கிடைத்த கல்வெட்டுகள் தமிழ் எழுத்தின் தொன்மையை உறுதிப்படுத்துகின்றன.தமிழ்-பிராமி எழுத்து

https://doi.org/10.63300/kijts06022026.28

காலப்போக்கில் மாற்றம் பெற்று வட்டெழுத்து மற்றும் பிற தமிழ் எழுத்து வடிவங்களாக வளர்ந்தது. பல்லவர், சோழர் காலங்களில் தமிழ் எழுத்து மேலும் சீரமைக்கப்பட்டு, பின்னர் இன்றைய தமிழ் எழுத்து வடிவம் படிப்படியாக நிலைபெற்றது. எனவே, தமிழ் எழுத்தின் வளர்ச்சியை தமிழ்-பிராமி → வட்டெழுத்து → இடைக்காலத் தமிழ் எழுத்து → நவீனத் தமிழ் எழுத்து என்ற பரிணாமப் பாதையில் காணலாம். கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடிகள் ஆகியவை தமிழ் எழுத்தின் வரலாற்று வளர்ச்சியை அறிய முக்கிய ஆதாரங்களாக விளங்குகின்றன.

**References:**


[1.] Richard Saloman, 1998, *Indian Epigraphy (A Guide to The Study of Inscriptions in Sanskrit, Prakrit, And the Other Indo-Aryan Languages)*, New York Oxford, Oxford University Press, P.10,18-19.

[2.] கா. ராஜன், 2006, *கல்வெட்டியல்*, மனோ பதிப்பகம், தஞ்சாவூர், ப. 100-115.

[3.] Richard Saloman, 1998*, Indian Epigraphy (A Guide to The Study of Inscriptions in Sanskrit, Prakrit, And the Other Indo-Aryan Languages)*, New York Oxford, Oxford University Press, P. 8-9.

[4.] Jao Tsung-I, 1964, *Chinese Sources on Brahmi and Kharosthi*, Annals of the Bhandarkar Oriental Research Institute, Vol. 45, No. 1/4. Pp.39-47.

[5.] நடன. காசிநாதன், 2014, *தொன்மைத் தமிழ்க் கல்வெட்டுக்கள் – ஒரு புலனாய்வு*, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், ப.23.

[6.] தி. ஸ்ரீ. ஸ்ரீதர் இ.ஆ.ப (பதிப்பு), *தமிழ்-பிராமி கல்வெட்டுகள்*, 2006, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, சென்னை, ப 8-10.

[7.] Iravatham Mahadevan, 1968, *Tamil Brahmi Inscriptions of the sangam age*, II international conference – seminar of Tamil Studies, January 3-10, p. 1-3.

[8.] Ibid. p.4.

[9.] நடன. காசிநாதன், 2014, *தொன்மைத் தமிழ்க் கல்வெட்டுக்கள் – ஒரு புலனாய்வு*, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், ப.30.

[10.]நடன. காசிநாதன், 2009, *கல்லெழுத்துக்கலை*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, ப. 21.

[11.]நடன. காசிநாதன், 1969, *கல்வெட்டின் கதை*, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, ப.1.